இராமேசுவரத்தில் பயணியர் விடுதிகள்.

*வினா எண் 227—திரு. செ. சிவசாமி: மாண்புமிகு செய்தி, அறநிலையத் துறைஅமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) இராமேசுவரத்தில் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக தங்குமிடங்களை விஸ்தரிக்கும் திட்டம் உள்ளதா ?

(ஆ) சாதாரண மக்களும் தங்கிப் பார்க்கும் அளவுக்கு கட்டணங்களை குறைக்கும் உத்தேசம் ஏதும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) மற்றும் (ஆ): இருக்கிற கட்டணங்களைக் குறைக்கும் உத்தேசம் இல்லை. ஆனால் குறைந்த வருவாய்ப் பிரிவு சுற்றுலாப் பயணிகளுக்கு வசதி செய்யும் வகையில் இராமேசுவரத்தில் இளைஞர் இல்லம் ஒன்று கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்பணி தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது.

[முற்பகல் 9–30]

திரு. செ. சிவசாமி: இராமேசுவரத்தில் உள்ள சுற்றுலாப் பயணிகளுக்கான கட்டிடங்கள் அழகான கட்டிடங்களாக இருக்கின்றன. ஆனால் அதற்குப் பக்கத்தில் போகமுடியாத அளவுக்கு கட்டணங்கள் இருக்கின்றன. நூற்றுக்கணக்கான வீடுகளும் கட்டப்பட்டிருக்கின்றன. அதில் கூட சாதாரண மக்கள் தங்க முடியாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. ஆயிரக்கணக்கான பேர்கள் ஒவ்வொரு மாதமும் வரக்கூடிய அந்த முக்கியமான ஸ்தலத்தில் சாதாரண மக்கள் தங்குவதற்கு உரிய வகையில் கட்டணங்கள் குறைக்கப்படுமா, அல்லது புதிய ஏற்பாடுகள் செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: குறைந்த கட்டணத்தில் வசதி செய்து கொடுப்பதற்காகத்தான் மூன்று லட்சம் ரூபாய் செலவில் இளைஞர் இல்லம் கட்டுவதற்கான திட்டம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

திரு. ஏ. சி. சண்முகம்: உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளையும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளையும் கவரும் வண்ணம் இராமேசுவரத்தை அழகுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு உறுப்பினர் தனியாகக் கேள்வி போடுவார்களானால் விவரங்களை விவரமாகச் சேகரித்துத் தரமுடியும்.